என்பது தெரியும். எனவே, சில சலுகைகளைப் பெறுவதற்காக கலப்புத் திருமணம் செய்துகொள்வதைவிட கொள்கையின் அடிப்படையில் கலப்புத் திருமணம் செய்துகொள்வது மிகவும் நல்லது.

திரு. ஜெ. பெள்ளி கவுடர்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டில் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கடந்த ஆண்டு அல்ல, 1968-ம் ஆண்டில் கலப்புத் திருமண பரிசு பெற்ற தம்பதிகள் மாத்திரம் 48 பேர்கள் என்ற கணக்கு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: கலப்புத் திருமணம் செய்துகொண்ட பெண்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்தவர்களின் விகிதாசாரம் கூடுதலா அல்லது மற்ற வகுப்புப் பெண்களின் விகிதாசாரம் கூடுதலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இந்தப் புள்ளிவிவரம் இப்பொழுது இல்லை. என்றாலும், பொதுவாக கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களில் ஆணோ அல்லது பெண்ணோ யாரோ ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரைச் சேர்ந்தவர்களாகத்தான் இருப்பார்கள். எந்த விகிதாசாரப்படி என்பதற்கான கணக்கை இப்பொழுது எடுக்கவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன்: ஜாதி மத பேதமற்ற சமுதாயத்தை வரும் தலைமுறையிலாவது உருவாக்க வேண்டும் என்பதற்கு அச்சாணியாக அமைந்திருப்பது தான் கலப்புத் திருமணமாகும். ஆகையினால், இந்தத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற வகையில் தமிழகத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் அத்தனையையும் மாநில அரசு தரவேண்டும். அதே போல மத்திய அரசு தருவதற்கும் ஏற்பாடு செய்வதற்கு இந்த அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: கலப்புத் திருமணம் செய்துகொண்டாலும், அந்தத் தம்பதிகளில் ஒருவர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினராக இருப்பர். ஆகவே, அவருக்கு அந்த சமுதாயத்தின் அடிப்படையில் எல்லாச் சலுகைகளையும் அரசாங்கம் செய்து கொடுத்துக்கொண்டுதான் இருக்கும். இது மாநில அரசின் திட்டமாகும். மத்திய அரசாங்க உதவிகோரும் எண்ணம் இப்பொழுது இல்லை.

Milk Powder

* 179 Q.—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state :

(a) whether a large quantity of milk powder is being secured by the State Government from UNICEF ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) " யுனிசெப் " மூகவர் நிறுவனத்தின் மூலம் பால் பவுடர் எதுவும் பால் பண்ணை மேம் பாட்டுத் துறைக்கு கிடைக்கப்பெறுவதில்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : கேர் நிறுவனத்திலிருந்து இந்த அரசுக்கு அதிக அளவிலே பால் பவுடர் கிடைத்துவருகிறது. இந்தப் பவுடர் சரியான முறையிலே விநியோகிக்கப்படாமல், மளிகைக் கடைகளிலும், ஹோட்டல்களிலும் விற்கப்பட்டு விநியோகிக்கப்படுகிறது. இனியாகிலும் இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேர் நிறுவனத்திலிருந்து வரும் பால் மாதவரம் பால் பண்ணைக்கு வருவதில்லை. கல்வித் துறை அமைச்சருக்குப் போடவேண்டிய கேள்வி இது.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the quantity of deficit of milk in our State and the alternative schemes proposed by this Government to make up the deficit

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பால் குறைவாக இருக்கிற காரணத்தினால், பாலை அதிகமாக அளிக்கவேண்டும் என்பதற்காக அரசாங்கத்திற்கு உலக உணவுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிற பால் பவுடர் வருகிறது. சிங்கிள் டோன்டு, டபிள் டோன்டு என்று பாலாக மாற்றி, அது சென்னையிலும் மற்ற இடங்களிலும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

Madhavaram Milk Project

*** 180 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR :** Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(*a*) whether it is a fact that the residents of Madras City have not been supplied with Buffalo milk from July 1969 by the Madras Milk Project at Madhavaram ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) வெளியூர்களிலிருந்து வரும் பாலின் அளவு படிப்படியாகக் குறைந்ததால், 1969 ஜூன் 16 முதல் எருமைப்பால் ஒரு வேளைக்கு மட்டும் வழங்கப்பட்டது. மற்றொரு வேளையில் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப்பட்டது. ஜூலைத்திங்கள் முதல் எருமைப்பால் வழங்குவது அறவே நிறுத்தப்பட்டு காலை, மாலை, ஆகிய இருவேளைகளிலும் தரம் உயர்த்தப்பட்ட பால் வழங்கப் பட்டது. 15—8—69 வரை பசும்பால் முறையாக வழங்கப்பட்டு வந்தது. அதன் பின்னர் பசும்பாலுக்குப் பதிலாக தரம் உயர்த்தப் பட்ட பால் வழங்கப்பட்டது. 16—10—69 முதல் பசும்பால் மீண்டும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. 16—10—69 முதல்